# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,251 — 1936 ம் ஸ்ரீ ஐப்பசிமீ 16 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1896 ம் ஆண்டின் 13 ம் இலக்க ஸ்தல யாத்திரைகளைப்பற்றிய சட்டம்.

1936 ம் ஆண்டு கார்த்திகை மாசத்தில் கதிர்காம திருக்கார்த்திகைத திருவிழாவுக்கு வழக்கமான யாத்திரையை நோககி, உததம தேசாதிபதியவர்கள் 1897 ம் ஆண்டின் 7 ம் இலக்கச சட்டத்தின் பிரகாரம 1931 ம் ஆணடின் இலங்கை (இராசசிய மந்திர சபை) சபையின கட்டளையின் 93 ம் பிரிவினது அதிகாரங்களைக்கொண்டு செய்த பிரமாணங்கள்.

டி. பி. ஜயதிலகக,
சுயகாரிய மந்திரி.

சுயகாரிய மநதிரி கநதோர்,
கொழும்பு, 1936 ம் ஸ்ரீ ஐப்பசிமீ 7 ந் உ.

பிரமாணஙகள்.

1. (*a*) கதிர்காமத்தில் 1936 ம் ஆண்டு திருககார்த்திகைத திருவிழா நடக்கும் நாட்களும் யாத்திரிகர் கதிர்காமத்தில் தஙகக்கூடிய காலமும் 3 நாட்கள மாத்திரம்தான். அதாவது 1936 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27 ந் திகதி தொடக்கம் 29 ந் திகதி முடியும் வரைககும்.

(*b*) முதலாவதாகச் சொல்லப்பட்ட தேதிக்கு முனபாக வருகிற அல்லது குறிக்கப்பட்ட காலத்துக்குப்பின் நிற்கிற யாத்திரிகர்களை குற்றவாளியர்களாகக் காணப்படும்.

2. "யாத்திரிகர் தங்கியிருககும் பாடி" ஊவா மாகாண அரசாட்சி ஏசண்டரின் மேல் அதிகாரத்திலும், "பார்வைசெய்கிற உத்தியோகஸதர்" என்று பெயர் கொடுக்கப்பட்ட பொறுப்பேற்றிருக்கும் உத்தியோகஸதரின் உடன் அதிகாரப் பார்வையிலும் இருக்கும் பின்னுவதாக சொல்லப்பட்ட உத்தியோகஸ்தருக்கு ஒரு வைத்திய உத்தியோகஸ்தரும் ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தரும் உதவி புரிவார்கள்

3. கதிர்காமத்தில் திருவிழா நடக்கும் காலததில் தொற்றுவியாதி உண்டுபடின் பார்வை செயகிற உததியோகஸ்தருக்கு திருவிழாவை நிறுத்தவும் யாத்திரிகர்களை அந்த ஊரை உடனே விட்டு தங்கள் இடங்களுக்குப் போகும்படி செய்யவும் இன்ன பாதையாற் போகவேண்டுமென்று நியமிக்கவும் தத்துவமுண்டு.

4. பார்வைசெய்யும் உத்தியோகஸ்தருக்கு கதிர்காமத்திலும் போகும் பயணத்திலும், திரும்பிச் செல்லும் பயணததிலும் இதன்கீழ் குறிக்கப்பட்டவைகளைச்செய்ய அதிகாரமுண்டு :—

(*a*) யாத்திரிகர்களுக்கு களுவவும், முழுகவும், தண்ணீரெடுக்கவும், தண்ணீர் குடிக்கவும், மலசல பாதைக்குப் போகவும் வேறு வேறு தலங்களை நியமிக்கவும் ;

(*b*) அந்த வகுப்பைச்சார்ந்த யாத்திரிகர் தஙகியிருக்கும்படி வெவ்வேறு தலங்களை நியமிக்கவும் ;

(*c*) யாததிரிகர் கூட்டமாக இனன பாதையால செல்லவேணடுமென்று நியமிக்கவும் ;

(*d*) யாத்திரிகர்களுக்கு கொடுக்கப்படும தீன் பகிர்நது கொடுத்தலைப் பார்த்து நடத்தவும் ;

(*e*) நோய்கொளளும யாத்திரிகர்களுக்குத் தங்கியிருக்கும்படி வெவ்வேறே தலத்தை நியமிக்கவும் அவ்வாட்களுடன் வேறொருவரையும் கலவாமலிருக்கும்படி பண்ணவும், அவர்களுக்குப் பயணம் போகக்கூடாதுபோனால் நிறுத்தி வைத்திருககவும்.

இவ்விதமான காரணஙகளைகொண்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரினால் கொடுக்கப்படுகிற கட்டளையை ஏதாவது எவராவது மீறுபவர் குற்றவாளியாகக் காணப்படுவர்.

5. இந்தப் பிரமாணங்களின் பொருட்டு "யாத்திரிகர் தங்கியிருக்கும் பாடி" என்பதாவது :—

(*a*) கதிர்காமத்துப் பெரிய கோயிலைச் சுற்றி நாலு பக்கமும் அரைக் கட்டை தூரத்துக்குள் உள்ள பாகம்.

(*b*) செல்லக கதிர்காமததுப் பிள்ளையார் கோயிலைச் சுறறி நாலு பக்கமும் காக்கட்டை தூரத்துக்குள் உள்ள பாகமும்.

6. பயணத்தில் அல்லது தங்கியிருக்குமிடத்தில் சுகத்துக்குப் பழுதானதென்று பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது அப்படியான உத்தியோகஸ்தர் இல்லாதிருந்தால் பிரதான பொலிஸ் உத்தியோகஸ்தர் காணுந் தின் சாமானெல்லாவற்றையும் பறித்து அழித்துப்போடப் போலீசார் தத்துவமுடையவராயிருப்பர். இந்தக் கடமையை அல்லது வேறு எந்தக் கடமையையும் பொலீசார் செய்யும்போது அவ்விதஞ் செய்ய விடாமல் எவராவது தடைபண்ணுபவர் குற்றவாளியாகக் காணப்படுவர்.

7. பார்வைசெயகிற உத்தியோகஸ்தரிடமிருந்து அல்லது அவரால் தத்துவம் கொடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறுமல் மாடுகளை அல்லது வண்டி மாடுகளை தங்கியிருக்குமிடமிருந்து காற்கட்டைககுட்பட யாராகுதல் கொண்டுவந்தால் அவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள.

8. உத்தரவுசசீட்டுப பெறுவோர் தஙகியிருக்குமிடத்தில் பார்வை செயகிற உத்தியோகஸ்தரால் சனங்களின் பொதுச சுகத்துக்காகவும் சுகாதாரத்துக்காகவும், போக்குவரவுக்கு தகுதியாயும் நியமிக்கப்படும் கட்டளைப் பிரமாணங்களை அனுசரிக்கக் கடமைப்பட்டவர்களாவார்கள்.

9. (1) (*a*) எவ்வித சாமான்களையும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் குறித்துவிடும் இடத்திலன்றி வேறெந்த இடத்திலும் விற்க வைத்திருக்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

(*b*) பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அல்லது வைத்திய உத்தியோகஸ்தர் அல்லது அவர்கள் இல்லாதிருந்தால் பிரதான பொலிஸ் உத்தியோகஸ்தர் சுகத்துக்குப் பழுதான போசனமென்று தீர்க்கும் எப்போசனத்தையும் விற்கும் எவரும் குற்றவாளியாக காணப்படுவர்.

2. (a) சகல சாப்பாட்டுக் கடைகளும், தேததண்ணீர் போப்பிக் கடைகளும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் திருப்திக்கு நுப்பரவாகவும் சுகாதாரத்துக்கு ஏற்றதாயும் வைத்திருக்க வேண்டும்.

(b) விற்பனைக்கு வைத்திருக்கும் எல்லாவிதமான கேக்வகைகளும் இனிப்புச சாமானகளும், மற்றும் சமையல் செய்யப்பட்ட தீன்பண்டங்களும் இலையான் போகாதபடி செய்யப்பட்ட கண்ணடிப் பெட்டிக்குள் வரிசையாக வைத்திருக்கவேண்டும்.

(c) மிஞ்சிய தேததண்ணீர், கோப்பி அல்லது பால் அல்லது மிச்சமான சாப்பாடு, சமையல்பாகக் கழிவுகள் அலலது குப்பை, நிலத்திலே வீசப்படாது. ஆனால் இவைகளை சுகாதார வேலையாட்கள் அபபுறப்படுத்துவதற்காக பின்னுற் குறிக்கப்பட்ட பாத்திரத்திலே சேர்த்துவைக்க வேண்டும்.

(d) வியாபாரத்துககு அல்லது வேறு முயற்சிக்குப் பாவிக்கப்படும் ஒவ்வொரு கட்டடத்திலும் அல்லது கொட்டிலிலும் நாலரை அடிக் கனத்துக்குக் குறையாமலுள்ள லோகத்தினுல் அல்லது மரத்தினுல் செய்யப்பட்ட ஊத்தைப் பெட்டி ஒன்று இருக்கவேண்டும். அதில் அந்த இடத்திலுள்ள குப்பை மற்றும் கழிவு சாமான்களைப் போடவேண்டும். குப்பை அல்லது கழிவு சாமான்கள் போடும்பொழுது அலலது வெளியே எடுக்கும் பொழுது தவிர மற்ற எல்லா வேளைகளிலும் அதை ஒரு லோக அல்லது மாமூடியினுல் மூடப்பட்டிருக்கவேண்டும்.

10. யாராயினும் கதிர்காமத்தில தங்கியிருக்கும் காலத்தில் அரசாட்சியாரால நியமித்திருக்குமிடத்தைவிட வேறெந்த விடத்திலும் மலசலங் கழித்தால் அல்லது மலத்தை மணணுல் மூடாவிட்டால், அல்லது பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரால் நியமிக்கும் தலத்துக்கு மேலே ஆற்றிலிறங்க அல்லது குளிககச் சம்பவித்தால் அப்படிச் செய்தவர்கள் குற்றவாளியர்களாக காணப்படுவார்கள்.

11. தொற்று வியாதியால பீடிககப்பட்டு பார்வைசெய்கிற உத்தியோகஸ்தருக்கு அல்லது வைத்திய உத்தியோகஸ்தருக்கு அலலது பிரதான பொலிஸ் உத்தியோகஸ்தருககு அது விஷயத்தை அறிவிக்கத்தவறும் எவரும் அல்லது அவ்வியாதி வந்த நோயாளியை ஒளித்து வைப்பதற்கு உதவி செய்யும் அல்லது தூண்டிவிடும் எவரும் குற்றமுடையவராகக காணப்படுவர்.

12. சகல பேர்களும் பயணத்திலும் கதிர்காமத்திலும் பார்வைசெய்கிற உத்தியோகஸ்தர் அலலது பிரதான பொலிஸ் உத்தியோகஸ்தர் நியமிக்கு மிடத்தில் விடுதிவிட வேண்டும். அப்படிச்செய்ய மறுக்கும் அல்லது செய்யாது விட்டுவிடும் எவரும் குற்றமுடையவராகக் கொள்ளப்படுவர்.

13. பார்வைசெய்கிற உத்தியோகஸ்தரின் உத்தரவை முன்னதாக பெற்றுக்கொள்ளாமல் கதிர்காமத்தில் பெரிய தெருக்களுக்குச்சேர்ந்த இடத்தை பிடிக்கக்கூடியதாக யாராவது ஒரு கொட்டிலைக் கட்டினுலும், அல்லது ஒரு கட்டடத்தை பெருப்பித்துக் கட்டினுலும், குற்றமுடையவராக காணப்படுவர்.

## 1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்வதைப் பற்றிய சட்டம்.

பாணந்துறை (எர்பன் டிஸ்திறிக் கவுன்சில்) நகர பரிபாலன சபை எல்லைகட்குள், தகுந்த அதிகாரம் உடையவர்களால், 1901 ம் ஆண்டின் நாய்ப் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட உபவிதி.

ஏ. சைமன் சில்வா,
பாணந்துறை யூ. டீ. சீ. அதிபர்.

பாணநதுறை,
1936 ம் ஆண்டு ஐப்பசிமீ 7 ந் உ.

உபவிதி.

1933 ம் ஆண்டு பங்குனிமீ 24 ந் திகதியின 7,973 ம் இலக்க கெசெற்றில் பிரசுரஞ்செய்யப்பட்ட, 1933 ம் ஆண்டு பங்குனி மாசம் 8 ந் திகதியைக் கொண்ட உபவிதிகளில், 1 ம் உபவிதி பின்வருமாறு திருத்தப்பட்டிருக்கின்றது.

நாய்ப்பதிவு வீதம்.—பாணந்துறை (எர்பன டிஸ்திறிக கவுன்சில்) நகர பரிபாலன சபையில் எல்லைக்குள், ஒரு கடுவன் நாயையாவது ஒரு பெண்ணையாவது ஆட்சியில் அல்லது பாதுகாப்பில் வைத்திருக்கும் எவரொருவரும் பின்வரும் வீதம் வருஷப் பதிவுச் சார் கட்டவேண்டும்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| (a) ஒவ்வொரு கடுவன் நாயின பேரில் | .. | 50 |
| (b) ஒவ்வொரு பெண்ணுய் பேரில் | .. | 1 50 |

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1911 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் 3 ம் பிரிவினுல் திருத்தப்பட்ட பிரகாரம் 1876 ம் ஆண்டின் 3 ம் சட்டத்தின் 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் 1934 ம் ஆண்டு (ஜூன்) ஆனிமீ 22 ந் திகதியின் “ கெசெற் ” பத்திரிகையில் பிரசுரிக்கப்பெற்றிருந்த மாட்சிமைதங்கிய தேசாதிபதியவர்களின் பிரதி காரியஸ்தத்தின்படி ஸ்தல ஸ்தாபன அதிகாரசபையார் ஜலஸ்கி பிளேசும் ரெம்பிள்லேனும் சந்திகக்கும் இடத்திலுள்ள விக்கினம் விளைவிக்கக்கூடிய மூலையைப் பெருப்பித்தலாகிய ஒரு பகிரங்க தேள்வைக்கு வேண்டியதான பின்சொல்லப்படும் காணியை எடுத்திக்கொள்வதற்கான எத்தனஞ் செய்யும்படி எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் :

பிரதமபடத்து இல : A 591. மருதானை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | ரெம்பிள்லேன் வரிப்பண இலக்கம் 15 உள்ள காணியின் பகுதி | 2 வருஷ 2 முருங்கைமரமும், பூமரங்களும் கற்சுவரின் பகுதியுமுள்ள தோட்டம் | கொழும்பு கமெல் பிளேசிலிருக்கும் ஜி. எஸ். பேர்ணுண்டோ | 0 0 3·18 |

மேற்சொல்லப்பட்ட காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன். மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ஆண்டு (நவம்பர்) கார்த்திகை மாசம் 7 ந் திகதி, சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மைக்கும், அவ்வுடந்தைகளுக்காக கொடுக்கும் பணத்தைப் பெறுவதற்கு எவ்வித பாத்தியமுடையவர்களென்றும் உறுதிகளாலும் பதிவுகொப்பிகளாலும் எனக்கு அத்தாட்சிப்பண்ணி அக்காணியிலுள்ள உடந்தைகளின் தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

கொழும்பு நகரசங்கக் கந்தோர்,
1936 ம் ஆடு (ஒக்ரோபர்) ஐப்பசிமீ 12 ந் உ.

டபிள்யூ. எல். மோர்பி,
நகரசங்க சபாநாயகரும், நகராதிகாரியும்.

1876 ம் ஆடு-த்து 3 ம் இலக்கச சட்டததினது 7 ம பிரிவின் பிரகாரம் பெலிவத்தை சந்தைக்கு வேண்டிய காணி கட்டடங்கள் அமைத்தல் என்னும் பகிரங்க தேள்வைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 352. குறிச்சி—பெலிவத்தை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | லொககுருலகே கொறட்டுவ | 20–30 வயதுகளுடைய 19 தென்னைகளும், 8 நிலையற்ற மண் சுவர் ஓலைககூரையுடைய கிட்டங்கிகளும், பாவிப்பற்ற ஓர் கிட்டங்கியும், 2 ஓலைக்கூரையுடைய பந்தல்களும், ஓர் ஓலைக்கூரையுடைய நிலையற்ற திறந்த பந்தலுமடங்கிய தென்னந்தோட்டம் | பெலிவத்தை வாசிகளாகிய (1) சீ. எம். டிங்கிகாமி, (2) எல். பீ. கே. தேபானிஸ், (3) எஸ். கே. கே. சினஞெஅப்பு | 0 0 13·9 |
| 2 | கோங்கஹாகொறட்டுவ | 30 வயதுக்குமேற்பட்ட 7 தென்னைகளும், 2 நிலையுள்ள கல் வேலைசெய்த ஓலைக்கூரையுடைய கிட்டங்கிகளும், 2 நிலையற்ற மண் சுவர், ஓலைக்கூரையுடைய கிட்டங்கிகளும், ஓர் நிலையற்ற கட்டடமுமடங்கிய தென்னந்தோட்டம் | பெலிவத்தை வாசிகளாகிய (1) எஸ். கே. கே. கரோலிஸ், (2) எஸ். கே. கே. சின்ஞெஅப்பு, (3) டீ. பீ. எம். சலோஹாமி, (4) எஸ. கே. கே. பைஸ்அப்பு, (5) டீ. பீ. எம். பொடிஹாமி, (6) டீ. பீ. எம். டியோனிஸ், (7) டீ. பீ. எம். கரோலிஸ், (8) டீ. பீ. எம். பவன் | 0 0 12·6 |
| 3 | கொம்புகேவத்தை | 30 வயதுக்குமேல்பட்ட 5 தென்னைகளுடைய தோட்டம் .. | பெலிவத்தை வாசியாகிய எஸ். கே. கே. கிறிகோறிஸ் | 0 0 1·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொளவதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சிஜப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான இதனைக்கொண்டு பிரசித்தமாய விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1936 ம் ஞூ மார்கழியீ 5 ந் தேதியிலன்று காலை 9.30 மணிக்கு கொடஉட பாடசாலையில எனமுனபாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்துறைக் கச்சேரி,
1936 ம் ஞூ ஐப்பசியீ 9 ந் வ.

எஸ். டீ. குமாரசுவாமி,
மேல் உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்துறை.

## நகரசங்க அங்கத்தவர் தெரிவுசெய்தலைப்பற்றிய அறிவித்தல்.

கோட்டே நகர சங்கம.

7 ம் பிரிவு.—அங்கத்தவர் தெரிவு செய்தல்.

1920 ம் ஆண்டு 11 ம் இலக்க தத்தமிட ஆளுகைச்சட்டத்தின் 31 ம் பிரிவின் உட்பிரிவு இரண்டின் முறைப்படி கோட்டே நகாசங்க 7 ம் பகுதிக்கு 1936 ம், 1937 ம், 1938 ம் ஆண்டுகளுக்கு அங்கத்தவராக தெரிவுசெய்யப்பட்ட ரீ. டீ. எஸ். ஏ. டிசானுயக்க என்பவர் காலஞ்சென்றபடியால் மேற்கூறப்பட்ட ஆளுகைச்சட்டத்தின் 33 ம் பிரிவின் உட்பிரிவு இரண்டின முறைப்படி அவ் உவாட்டுக்கு ஓர் அங்கத்தவரை, 1936 ம் ஆண்டு கார்த்திகையீ 24 ந் திகதி செவ்வாய்க்கிழமை தெரிவு செய்துகொள்ள உத்தேசித்திருக்கிறதென்று இததால் அறிவிக்கப்படுகின்றது.

அங்கத்தவராகத் தெரியப்பட முனவரும் ஒவ்வொருவருடைய பெயரும் நொமினேசன் பேபர் என்று சொல்லப்பட்ட அத்தாள்மேல எழுத்தில் கொடுபடவேண்டும். தெரியப்படுவதற்கென்று முன்வருகிறபெயர்வழிகாரர் அப்பிரிவிற்கு அங்கத்தவரைத் தெரிவுசெய்ய யோக்கியதை உடையவர்களின் டாப்பில் தமது பெயர்கள் உள்ளவர்களாகிய இருவரது கையொப்பமிட்டு அப்பத்திரம் கொடுக்கப்படுவதற்கென்று நியமித்திருக்கும் 1936 ம் ஆண்டு கார்த்திகையீ 24 ந் திகதியன்று 10 மணிக்கு அல்லது முன்பதாகவே கோட்டே நகர சங்கக் கந்தோரில் கொடுக்கப்படவேண்டும்.

இப்பிரிவிற்கு அங்கத்தவராகத் தெரியப்படுவதற்கென்று ஒன்றுக்கு மேலானவர்களின் பெயர்கள் கொடுக்கப்படுமானால் கீழே காட்டியபடி நியமிக்கப்பட்டிருக்கும் வாக்கு (வோட்) கொடுக்குமிடத்திலும் திகதியிலும வாக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை வாக்கு (வோட்) பெற்றுக்கொளளப்படும்.

| 7 ம் பிரிவிற்கு வாக்கு கொடுக்குமிடம். | திகதி. |
|---|---|
| செயின்ற் ஜோன் பொஸ் பாடசாலை, நுகேகொட | 1936 ம் ஆண்டு மார்கழியீ 12 ந் திகதி |

ஆர். எம். எம். வூர்ஸ்லி,
மேல் மாகாண அரசாட்சி ஏசன்றர்.

கொழும்புக் கச்சேரி,
1936 ம் ஆண்டு ஐப்பசியீ 12 ந் வ.

## டிஸ்திறிக் றேட் கொம்மிற்றி அங்கத்தவர்கள் தெரிவு.

இத்தால் அறிவிக்கப்படுகிறதாவது, 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் 26 ம் பிரிவின்படி ஐரோப்பியர், பாகர்மார், அல்லது இலங்கை யூரவர்கள் 1937 ம், 1938ம், 1939 ம் வருஷங்களுக்கு குருனுக்கல் டிஸ்திறிக் கொமிட்டியின அங்கத்தவராக அந்த உத்தியோகத்தை கேட்க நினைத்திருக்கிற யாவரும், தங்கள் எண்ணத்தைத் தெரிந்து கொள்ளுகிறதற்காக தெரிவுநாளைக்குக் குறைந்தது 10 நாளைக்கு முன்னே வடமேல் மாகாணத்தைச்சேர்ந்த பிரிவினசியர் றேட்டுக் கொம்மிட்டியின் அங்கத்தலைவருக்கு எழுதி அறிவிக்கும்படி இத்தால் கேட்கப்படுகிறது.

1936 ம் ஞூ கார்த்திகை (நவம்பர்)யீ 13 ந் திகதி காலை 10 மணிக்கு குருனுக்கல் கச்சேரியில் தெரிவு நடைபெறும்.

சீ. எச். டபிள்யு. கன்னங்கர,
சர்க்கர்த்தார்.

பிரவின்சியல் றேட்டுக் கொமிற்றி, குருனுக்கல்.
1936 ம் ஆண்டு ஐப்பசி (ஒக்ரோபர்)யீ 6 ந் வ.

இத்தால் அறிவிக்கப்படுகிறதாவது, 1861 ம் ஆண்டின் 10 ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின் 26 ம பிரிவின்படி ஐரோப்பியர், பர்கர்மார் அல்லது இலங்கை யூரவர்கள் 1937 ம், 1938 ம், 1939 ம் வருஷங்களுக்கு, புத்தளம்-சிலாபம் டிஸ்திறிக் கொமிட்டியின் அங்கத்தவராக அந்த உத்தியோகத்தை கேட்க நினைத்திருக்கிற யாவரும் தங்கள் எண்ணத்தை தெரிந்துகொள்ளுகிறதற்காக தெரிவு நாளைக்குக் குறைந்தது 10 நாளைக்கு முன்னே வடமேல் மாகாணத்தைச்சேர்ந்த பிரிவின்சியல் றேட்டுக் கொமிட்டியின் சங்கத்தலைவருக்கு எழுதி அறிவிக்கும்படி இத்தால் கேட்கப்படுகிறது.

1936 ம் ஞூ மார்கழி (டிசெம்பர்)யீ 14 ந் திகதி காலை 10 மணிக்கு புத்தளங் கச்சேரியில் தேர்தல் நடைபெறும்.

சீ. எச். டபிள்யு. கன்னங்கர,
சர்க்கர்த்தார்.

பிரவின்சியல் றேட்டுக் கொமிற்றி, குருனுக்கல்.
1936 ம் ஞூ ஐப்பசி (ஒக்ரோபர்)யீ 10 ந் வ.

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

மாத்துறை கடவத்தை நான்கிற்குள் தொடகமையில் இருக்கும் விதான் கமகே பாறதேவிஸ்ஹ ஆபா யென்று நான், அறிவிப்பதாவது :—இதற்கு மூன்று மாதங்களுக்குப்பின் என்னை சிங்களப் பாஷையில் வேலைசெய்யக் கூடிய நொத்தாரிசாக மாத்துறை டிஸ்திறிக்கில் வேலைசெய்ய றிஜிஸ்ரூர் ஜெனரலிடம் கேட்டு நிற்கிறேன்.

V. B. Epa.

மாத்துறை,
1936 ம் ஆண்டு செப்றெம்பர்யீ 7 ந் வ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.